[2001 செப்டம்பர் 14

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய இந்தியா மார்க் 2 பம்புகள் அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல்.

திரு. இ. புகழேந்தி: தலைவர் அவர்களே, ...

4. தகவல் கோரல்

(அ) வேலூர் குடிநீர்ப் பிரச்சினை

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், சொல்லுங்கள். ஞானசேகரன் சொல்லுங்கள்.

முற்பகல் 11-20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலே இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை குறித்து, நான் ஏற்கெனவே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள பாலாற்றில் இருக்கக்கூடிய கிணறுகள் எல்லாம் வற்றிவிட்டன. 10 நாட்களுக்கு ஒருமுறைதான் வேலூரிலே குடிநீர் வழங்கப்படுகிறது. மிகவும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 3 ஆண்டுகளுக்கு முன்னாலே, எங்களுடைய வேலூர் குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு G.O. போடப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும்கூட, அது 3 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் போய், கடைசியில் இப்போது நான்காவது முறையாக டெண்டர் விடப்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், உட்காருங்கள். இது வேலூர் குடிநீர் பற்றிய பிரச்சினையானது என்றால், அதை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சரிடத்தில் ஏதாவது இது சம்பந்தமான விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். ஏனென்றால் இன்றைக்குக் கடைசி நாள். அமைச்சர், ஏதாவது விளக்கம் இருந்தால் சொல்லுங்கள்.

2001 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 19.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில், திட்டங்கள் தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்தம் நிர்வாகத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: டெண்டர் விட்டாகிவிட்டது. Only it should be approved by the Board.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தனியாக அமைச்சரிடம் போய்க் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. புகழேந்தி.

(ஆ) கடலூர், வருவாய்த் துறை மற்றும் நில அளவைத் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காதது

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பாக கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்று கொடுத்திருந்தேன். கடலூரில் 50 அரசு ஊழியர்கள், வருவாய்த் துறை மற்றும் நில அளவுத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், அயல் பணி deputation duty என்று நிலம் கையகப்படுத்துகின்ற பணியிலே இருக்கின்ற அவர்களுக்கு பணிகள் முடிந்த பிறகும், இன்னும்—கடந்த 3 மாதங்களாக, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 3 மாதங்களாக—ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறது; சம்பளம் தரப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகத் தருவதற்கு ஏற்பாடு—வேறு பணம் வர வேண்டுமென்றால்கூட அரசு அவர்களுக்கு ஊதியம் கொடுத்துவிட்டு வருகின்ற நாகார்ஜுனாவோ அல்லது வேறு திட்டத்தின் மூலமாகவோ வருகின்ற பணத்தை ஒதுக்கிக் கொடுத்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. யோசனைகளையெல்லாம் சொல்லாதீர்கள். என்ன பிரச்சினை என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. இ. புகழேந்தி: ஆகவே, அதற்கான நடவடிக்கையை உடனே அரசு எடுத்து, அந்த 50 ஊழியர்களுக்கும் இந்த 3 மாத சம்பளத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய்த் துறை அமைச்சரிடம் ஏதாவது பதில் இருக்கிறதா?